# “பெரியாரின் நெறிவாழும் பேரனே வருக! பெருவெற்றி பெறப்போகும் தீரனே வருக!”

ஏழாவது முறையும்
எழிலாட்சி நடத்தி
இணையற்ற சாதனைகள்
இயற்றப் போகும் நம்
ஏரார்ந்த முதலமைச்சர்
ஏழுநாள் பயணத்தை
இனிதே முடித்து
எட்டாத உயரங்கள்
எட்டிப் பிடித்து
ஏராள முதலீடு
ஏற்றுக் களித்து

‘இவரன்றோ தமிழ்நாட்டின்
இமயமெனப்’ பொலிந்து
இன்று திரும்பினார்
இங்கிலாந்தில் இருந்து!

ஈரோடு காஞ்சி
இசைமேவும் திருவாரூர்ப்
பல்கலைக் கழகங்களில்
பாடு கிடந்து
பாடங்கள் படித்துப்
பகுத்தறிவுப் பட்டங்கள்
பலவும் பெற்ற
பண்பாட்டுப் பெட்டகம்
மாண்புமிகு முதல்வர் அவர்கள்
கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம்
மற்றும்
ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின்
அறிவாய்வு அரங்கங்களை
அலங்கரித்து விட்டு,

**‘ஆகாயச் சூரியன்**
**அனல்மாறிக் குளிரடைந்து**
**அழகிய புன்னகையை**
**அணிந்த கோலத்தில்**
**இறங்கி வந்தால்**
**எவ்வண்ணம் இருக்குமோ’**
**அவ்வண்ணம் வந்துற்றார்**
**இன்று!**

**முதலீடுகளை ஈர்க்க**
**முதல்வராய்ச் சென்றவர்**
**முத்தமிழ் உலகத்தின்**
**முதல்வராய்த் திரும்பியிருக்கிறார்!**

அரசுமுறைப் பயணத்தால்
ஆகாயம் கடந்தவர்
ஆகாயப் புகழை
அள்ளிக் கொண்டு
வந்திருக்கிறார்!

தெற்காசிய அரசியலின்
திசைகளைத் தீர்மானித்த
திராவிட இயக்கத்தின்
திருமுகமாய்ச் சென்ற
திராவிட மாடல் நாயகர்

தேசத்தின் பார்வையைத்
திருப்பித் தன்மீது
ஒருமுகமாய்க் குவித்து
ஒளிச்சேர்க்கை பெற்று
உற்சாகமாய் வந்திருக்கிறார்!

தாடிவைத்த பெரியாரின்
தன்மானக் கருத்துகளை
மூடிவைக்க முடியாது என்று
மூதறிஞர் உலகம்
முன்வைத்த முழக்கங்களை

இங்கிலாந்தில் கேட்டு
இதயம் பூரித்துப்
பொங்கிவரும் காவிரியின்
புனல்வேக எழுச்சியுடன்
இன்று திரும்பியுள்ளார்..
எங்கள் மகா தலைவர்!

கண்மூடிப் பழக்கங்கள்
மண்மூடிப் போக
முகமூடி மனிதர்களின்
முற்றுகை தகர்த்து
ஆதிக்கபுரிகளின்
ஆணிவேர் அறுத்து

சமத்துவச் சகாப்தத்தை
சமைத்துக் காட்டிய
‘பெரியாரின் பேரன்’ எனும்
பெருமிதச் சிகரத்தில்
ஏறி விளையாடி
இளங்கன்றாய் உரையாடி
எம் தலைவர் வந்துள்ளார்!

**‘பெரியாரின் நெறிவாழும்**
**பேரனே வருக!**
**பெருவெற்றி பெறப்போகும்**
**தீரனே வருக!’ என்று**
**அவரை**
**வரவேற்று மகிழ்கிறது**
**வரலாற்று வானம்!**

ஐம்பதுக்கும் மேற்பட்ட
நாடுகளைக் கொண்ட
ஐரோப்பாக் கண்டத்தில்
இரண்டு நூற்றாண்டுகளில்
ஏற்பட்ட புரட்சியை
இருபதே ஆண்டுகளில்..
இரத்தம் சிந்தாத



யுத்தம் நடத்தி
இங்கண் நிகழ்த்தியவர்
எந்தை பெரியார்!

அவரது திருவுருவப் படத்தை
உலகப் பேரறிவின்
உறைவிடத்தில் திறந்துவைத்து
ஓங்குபுகழ் மாடத்தின்
ஒளிவிளக்காய் ஆகிவிட்டார்
நம் உத்தமத் தலைவர்!

**‘வானமும் வையமும்**
**உள்ளவரை**
**மானமும் அறிவும்தான்**
**மனிதற்கு அழகு’ என்று**
**ஞான பாடம் போதித்தவரை,**
**ஞாலமே ஏத்தும்**
**ஞான பீடத்தில் நின்று**
**நாவாரப் போற்றி**
**உலகத் தமிழர்**
**உள்ளங்களில் எல்லாம்**
**நங்கூரமாய் இறங்கியிருக்கிறார்**
**நம்முடைய முதல்வர்!**

ஈரோட்டுப் பெரியார்
என்னும் திருநாமத்தின்
இயக்கவியல் ஆற்றலை
இங்கிலாந்தில் பதித்துவிட்டு

ஏறு நடையிட்டு
ஏராளக் கண்பட்டு
தாராள முதலீட்டு
ஒப்பந்தம் தாம்பெற்று
சீராளர் தளபதி
செம்மாந்து திரும்பியுள்ளார்!

கருத்தியல் தளங்களைக்
கலக மயமாக்கி
கட்சி மேடைகளைக்
கல்வி மயமாக்கி

ஒடுக்கப் பட்டவர்களை
உணர்வு மயமாக்கி
ஆணவக்காரர்களை
அச்ச மயமாக்கி
கூடிக் கலைந்த
கூட்டத்தை எல்லாம்
கொள்கை மயமாக்கிய
கோளரியாம் பெரியாரை..

‘உலக மயம்’ ஆக்கிய
உத்வேகத்தோடு
ஒருவார வரம்வாங்கி
உணர்ச்சிப் பிரவாகமாய்
வந்திருக்கிறார்,
கருணை மயமாகிக்
கடமையாற்றும்
நம் முதலமைச்சர்!

நம் திராவிட இயக்கம்
சுயமரியாதைச் சுடரில்
பூத்தது!
சாதிப் பாறையைத்
தகர்த்து முளைத்தது!

இந்தி எதிர்ப்புத் தீயில்
முகிழ்த்தது!
ஆரிய மாயையை
அடித்துத் துவைத்தது!

மடமையைக் கொளுத்திய
சாம்பலில் முளைத்தது!
மங்கையர் உரிமையைத்
தூக்கிப் பிடித்தது!

இன்றும்
இனமானம் காக்க
எரிமலையாய் வெடிப்பது!
வள்ளுவப் பறையை
ஓங்கி அடிப்பது!

சமத்துவ வானில்
என்றும் பறப்பது!
சாமான்ய மக்களின்
குரலாய் ஒலிப்பது!

**சுருக்கமாய்ச் சொன்னால்**
**இது**
**பெரியாரின் பூமி**
**பெரியாரின் பூமியென்று**
**சொல்லிக் கொண்டே**
**இருப்பது!**

இதைத்தான்
உலகச் செவிகளுக்கு
உரக்கச் சொல்லிவிட்டு
ஒப்பரிய முதல்வராய்
ஒளியுலா முடித்து
செப்பரிய மனிதராய்த்
திரும்பி இருக்கிறார்..நம்
செந்தமிழ் முதல்வர்!

தோட்டா தரணியின்
தூரிகை வரைந்த
உயிரோவியத்தைக்
கோட்டையில் வாழும் நம்



**டாக்டர்**
**எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.**
மேனாள் ஒன்றிய
இணையமைச்சர்

கோப்பெருஞ் சோழர்
திறந்து வைத்துவிட்டு..
தெளிதமிழ் ஊற்றாய்
தென்பொதிகைக் காற்றாய்
பெரியாரின் மாற்றாய்
தேன்புகழ் சுமந்து
திரும்பியிருக்கிறார்!

**‘பெரியாரின் நெறிவாழும்**
**பேரனே வருக!**
**பெருவெற்றி பெறப்போகும்**
**தீரனே வருக!’ என்று**
**அவரை**
**வரவேற்று மகிழ்கிறது**
**வரலாற்று வானம்!**

### 2026 சட்டமன்றத் தேர்தலில்

# மீண்டும் கழக ஆட்சி அமைய முனைப்புடன் பணியாற்றுவோம்!

## கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி கூட்டத்தில் தீர்மானம்! தே.மதியழகன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

கிருஷ்ணகிரி, செப். 9 - கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசானைக் கூட்டம் கிருஷ்ணகிரியில் மாவட்ட கழக செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமாள மதியழகன் தலைமையில், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சீனிவாசன் முன்னிலையில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தினேஷ் ராஜன் ஏற்பாட்டில் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மா னங்கள்.

தமிழகத்திலேயே முதன் முறையாக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் கலைஞர் நூலகம் துணை முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. பர்கூர், ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதிகளில் நூலகம் அமைப்பதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அந்த இடங்களில் நூலகம் அமைப்ப தற்கான பணிகளை இளைஞர் அணியினர் விரைந்து செயல்படுத்தி அதனை மாணவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது எனவும்

கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணைமுதலமைச்சருமான இளந்தலைவர் அவர்களின் சீரிய முயற்சியாலும் கிருஷ்ண கிரி கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் அமைப்புகளுக்கு அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டவர்கள் சிறப்பாக செயல்படுவது எனவும், இதனை கிளை, வார்டு கழகங்கள் வரை விரைவுப்படுத்தப்பட வேண்டும் என்ற இளந்தலைவர் அவர்களின் ஆணைப்படி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளை, வார்டு கழகங்களிலும் இளைஞர் அணி நிர்வாகிகள் நியமிப்பதற்கான விண்ணப்பங்களை அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களிடம் வழங்கப்பட்டு பூர்த்தி செய்த விண்ண ப்பங்களை மாவட்ட கழகத்திடம் வழங்க வேண்டும் எனவும்

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள மூன்று சட்டமன்ற தொகுதிகளில் பாகத்திற்கு ஓர் இளைஞர் வீதம் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி வழங்குவது எனவும், இதன் மூலம் கழக அரசின் சாதனைகளை சமூக வலைத்தளம் மூலம் எதிர்கட்சிகளின் பொய் பிரச்சாரங்களை தவிடுபொடியாக்கி, மீண்டும் நமது “திராவிட மாடல்” அரசின் முதல்வராக கழக தலைவர் தளபதியார் அவர்களை அரியணையில் ஏற்றிட பாடுபடுவோம் எனவும் ,

திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை மக்களிடம் எடுத்துச் செல்லும் வகையிலும் கழகத் தலைவர், இளந்தலைவர் மற்றும் தலைமை கழக செய்திகளை சமூக வலைத்தள பக்கங்களில் பரப்பிடும் வகையில் அவற்றை விருப்பம், பகிர்வது, பின்னூட்டம் இடுவது போன்ற செயல்பாடுகளை மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக இளைஞர் அணி நிர்வாகிகள் செய்திட வேண்டும். இதன் மூலம் இளைஞர் அணி நிர்வாகிகள் அனைத்து வலைதளங்களிலும் முனைப்பாக செயல்பட வேண்டும் என இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், துணைச் செயலாளர் சாவித்திரி, பொருளாளர் கதிரவன், பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் சக்திவேல், சங்கர், மகேந்திரன், சரவணன், லயேலா ராஜசேகர், சங்கர் உள்ளிட்ட நகர, ஒன்றிய, பேரூர் இளைஞரணியினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.





கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன், கரூரில் வருகின்ற செப்டம்பர் 17 அன்று நடைபெறவிருக்கும், தி.மு.க. முப்பெரும் விழா ஏற்பாடுகள் குறித்தான செயல்வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கூட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, உப்பிடமங்கலம், சக்தி மஹாலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ., தமிழகமே திரும்பிப் பார்க்கும் அளவிற்கு திருப்புமுனையாக கழக முப்பெரும் விழா அமைய வேண்டும் என அழைப்பு விடுத்து பேசினார்.

